ICBC 中国工商银行

# INDUSTRIAL AND COMMERCIAL BANK OF CHINA LIMITED

(Incorporated in The People's Republic of China)

தலைமை அலுவலகம் : 55 Fuxingmennei Avenue, Xicheng District, Beijing, China Tel: 86-10-6610 6114
சிங்கப்பூர் கிளை : 6 Raffles Quay #12-01, Singapore 048580 Tel: 6538 1066, Fax: 6538 1370

## ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலவர அறிக்கை

2020 டிசம்பர் 31-ல் முடிவுற்ற ஆண்டுக்கானது
(RMB மில்லியனில், மாற்று நாணயம் குறிப்பிடாத வரை)

| | 2020 | 2019 |
|---|---|---|
| **சொத்துகள்** | | |
| ரொக்கம் மற்றும் மத்திய வங்கிகளில் இருப்புகள் | 3,537,795 | 3,317,916 |
| வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களிலிருந்து வரவேண்டியவை | 1,081,897 | 1,042,368 |
| டெரிவேடிவ் நிதிநிலை சொத்துகள் | 134,155 | 68,311 |
| திருப்பப்பட்ட மறுகொள்முதலுக்கான உடன்படிக்கைகள் | 739,288 | 845,186 |
| வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முன்தொகைகளும் | 18,136,328 | 16,326,552 |
| நிதிநிலை முதலீடுகள் | 8,591,139 | 7,647,117 |
| - லாப நட்டத்தின் அடிப்படையிலான நியாயவிலை நிதிநிலை முதலீடுகள் | 784,483 | 962,078 |
| - இதர விரிவான வருமானத்தின் அடிப்படையிலான நியாயவிலை நிதிநிலை முதலீடுகள் | 1,540,988 | 1,476,872 |
| - குறைக்கப்பட்ட அடக்கவிலையின் அடிப்படையிலான நிதிநிலை முதலீடுகள் | 6,265,668 | 5,208,167 |
| துணை நிறுவன மற்றும் இணை-வர்த்தகத்திலுள்ள முதலீடுகள் | 41,206 | 32,490 |
| வர்த்தகச் சொத்துகளும் சாதனங்களும் | 286,279 | 286,561 |
| ஒத்திவைக்கப்பட்ட வருமான வரி சொத்துகள் | 67,713 | 62,536 |
| இதர சொத்துகள் | 729,258 | 480,399 |
| **மொத்தச் சொத்துகள்** | **33,345,058** | **30,109,436** |
| **பொறுப்புகள்** | | |
| மத்திய வங்கிகளுக்குச் சேரவேண்டியவை | 54,974 | 1,017 |
| லாப நட்டத்தின் அடிப்படையிலான நியாயவிலை நிதி பொறுப்புகள் | 87,938 | 102,242 |
| டெரிவேடிவ் நிதிநிலை பொறுப்புகள் | 140,973 | 85,180 |
| வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களுக்குச் சேரவேண்டியவை | 2,784,259 | 2,266,573 |
| மறுகொள்முதல் உடன்படிக்கைகள் | 293,434 | 263,273 |
| வைப்புத்தொகை சான்றிதழ்கள் | 335,676 | 355,428 |
| வாடிக்கையாளர்களுக்குச் சேரவேண்டியவை | 25,134,726 | 22,977,655 |
| செலுத்தவேண்டிய வருமான வரி | 89,785 | 96,192 |
| ஒத்திவைக்கப்பட்ட வருமான வரி பொறுப்புகள் | 2,881 | 1,873 |
| வெளியிடப்பட்ட கடன் பத்திரங்கள் | 798,127 | 742,875 |
| இதர பொறுப்புகள் | 712,770 | 525,125 |
| **மொத்த பொறுப்புகள்** | **30,435,543** | **27,417,433** |
| **பங்குமுதல்** | | |
| தலைமை நிறுவனப் பங்குதாரர்களுக்குச் சேரவேண்டியவை | | |
| பங்கு மூலதனம் | 356,407 | 356,407 |
| இதர பங்கு வகைகள் | 225,819 | 206,132 |
| ஒதுக்கிவைக்கப்பட்டவை | 800,718 | 745,111 |
| சேகரிக்கப்பட்ட லாபம் | 1,510,558 | 1,368,536 |
| | 2,893,502 | 2,676,186 |
| கட்டுப்பாடில்லா பாத்தியதை | 16,013 | 15,817 |
| **மொத்த பங்குமுதல்** | **2,909,515** | **2,692,003** |
| **மொத்த பங்குமுதல் மற்றும் பொறுப்புகள்** | **33,345,058** | **30,109,436** |

## ஒருங்கிணைக்கப்பட்ட லாப நட்ட அறிக்கை

2020 டிசம்பர் 31-ல் முடிவுற்ற ஆண்டுக்கானது
(RMB மில்லியனில், மாற்று நாணயம் குறிப்பிடாத வரை)

| | 2020 | 2019 |
|---|---|---|
| வட்டி வருமானம் | 1,092,521 | 1,063,445 |
| வட்டி செலவினம் | (445,756) | (431,228) |
| **நிகர வட்டி வருமானம்** | **646,765** | **632,217** |
| கட்டணம் மற்றும் கமிஷன் வருமானம் | 146,668 | 146,350 |
| கட்டணம் மற்றும் கமிஷன் செலவினம் | (15,453) | (15,777) |
| **நிகர கட்டணம் மற்றும் கமிஷன் வருமானம்** | **131,215** | **130,573** |
| நிகர வர்த்தக வருமானம் | 2,222 | 8,447 |
| நிதிநிலை முதலீடுகளின் மீதான நிகர லாபம்/(நட்டம்) | 11,829 | (3,682) |
| இதர நடைமுறை வருமானம், நிகரம் | 8,044 | 8,447 |
| **நடைமுறை வருமானம்** | **800,075** | **776,002** |
| நடைமுறை செலவினங்கள் | (206,585) | (207,776) |
| சொத்துகள் சேதாரத்தின் மீதான நட்டங்கள் | (202,668) | (178,957) |
| **நடைமுறை லாபம்** | **390,822** | **389,269** |
| துணை நிறுவனம் மற்றும் இணை-வர்த்தகத்திலிருந்து லாப பங்கு | 1,304 | 2,520 |
| **வரிவிதிப்புக்கு முந்திய லாபம்** | **392,126** | **391,789** |
| வருமான வரி செலவினம் | (74,441) | (78,428) |
| **ஆண்டுக்கான லாபம்** | **317,685** | **313,361** |
| சேரவேண்டியவை: | | |
| தலைமை நிறுவன பங்குதாரர்களுக்கு | 315,906 | 312,224 |
| கட்டுப்பாடில்லா பாத்தியதைக்கு | 1,779 | 1,137 |
| **ஆண்டுக்கான லாபம்** | **317,685** | **313,361** |
| **பங்கு ஒன்றின் வருமானம்** | | |
| - அடிப்படை (RMB யுவான்) | 0.86 | 0.86 |
| - ரொக்கமாக்கப்பட்டது (RMB யுவான்) | 0.86 | 0.86 |

## ஒருங்கிணைக்கப்பட்ட லாப நட்ட மற்றும் இதர விரிவான வருமான அறிக்கை

2020 டிசம்பர் 31-ல் முடிவுற்ற ஆண்டுக்கானது
(RMB மில்லியனில், மாற்று நாணயம் குறிப்பிடாத வரை)

| | 2020 | 2019 |
|---|---|---|
| ஆண்டுக்கான லாபம் | 317,685 | 313,361 |
| இதர விரிவான வருமானம் (வரிவிதிப்புக்குப் பின், நிகரம்): | | |
| லாப நட்ட கணக்குக்கு மறுவகைப்படுத்தப் படாதவைகள்: | | |
| இதர விரிவான வருமானத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட நியாயவிலைப் பங்கு மூலதன சாதனங்களின் நியாயவிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் | 1,289 | (38) |
| பங்கு மூலதன அடிப்படையில் கணக்கிடப்பட்ட இதர விரிவான வருமானம் | (5) | 11 |
| மற்றவைகள் | 8 | (5) |
| பிறகு லாப நட்ட கணக்குக்கு மறுவகைப்படுத்தக் கூடியவைகள்: | | |
| இதர விரிவான வருமானத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட நியாயவிலை கடன் பத்திரச் சாதனங்களின் நியாயவிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் | (3,042) | 8,026 |
| இதர விரிவான வருமானத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட கடன் பத்திரச் சாதனங்களின் கடனாலான இழப்புகள் | 1,051 | (64) |
| ரொக்கப் புழக்க ஹெட்ஜிங் சாதனங்களிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டவை | (253) | (634) |
| பங்கு மூலதன அடிப்படையில் கணக்கிடப்பட்ட இதர விரிவான வருமானம் | 14 | (530) |
| வெளிநாட்டுப் பண பரிவர்த்தனை வித்தியாசங்கள் | (16,212) | 4,271 |
| மற்றவைகள் | 1,311 | (329) |
| ஆண்டுக்கான இதர விரிவான வருமானக் கூட்டுத்தொகை | (15,839) | 10,708 |
| ஆண்டுக்கான இதர விரிவான மொத்த வருமானம் | 301,846 | 324,069 |
| இதர விரிவான மொத்த வருமானம் சேரவேண்டியவை: | | |
| தலைமை நிறுவன பங்குதாரர்களுக்கு | 300,536 | 322,853 |
| கட்டுப்பாடில்லா பாத்தியதைக்கு | 1,310 | 1,216 |
| | 301,846 | 324,069 |

தணிக்கைச் செய்யப்பட்ட வங்கியின் நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த அங்கமாக குறிப்புகள் உள்ளன. வங்கியின் தணிக்கைச் செய்யப்பட்ட முழு நிதிநிலை, நிதிநிலவர அறிக்கைகளையும் பார்க்காமல் அவற்றைப் பற்றியும் வங்கியின் நிதிநிலைமையைப் பற்றியும் முழுமையாகப் புரிந்துக்கொள்ள முடியாது. வங்கியின் ஆண்டறிக்கையுடன் நிதிநிலை அறிக்கை களுடன் கூடிய குறிப்புகளையும் துணை நிறுவனங்களின் பட்டியலையும்: Industrial and Commercial Bank of China Limited, சிங்கப்பூர் கிளை, 6 Raffles Quay #12-01, Singapore 048580, முகவரியில் அல்லது இணையத்தில் (www.icbc-ltd.com) பெற்றுக்கொள்ளலாம்.

## மூலதன பொருத்த விகிதம்

(RMB மில்லியனில், விழுக்காடுகள் தவிர்த்து)

| பட்டியல் | 31 டிசம்பர் 2020 | 31 டிசம்பர் 2019 |
|---|---|---|
| நிகர மூலதன அடித்தளம் | 3,396,186 | 3,121,479 |
| நிகர முக்கிய அடுக்கு 1 மூலதனம் | 2,653,002 | 2,457,274 |
| இடர்-பரிசீலனைக்குட்பட்ட சொத்துகள் | 20,124,139 | 18,616,886 |
| முக்கிய அடுக்கு 1 மூலதன பொருத்த விகிதம் | 13.18% | 13.20% |
| அடுக்கு 1 மூலதன பொருத்த விகிதம் | 14.28% | 14.27% |
| மூலதன பொருத்த விகிதம் | 16.88% | 16.77% |

வங்கியைக் கலைக்கும் அல்லது அதை போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதிகாரப்பூர்வ பெறுநர் நியமிக்கப்பட்டால் வங்கி நிறுவப்பட்ட நாட்டின் சட்டங்களின் கீழ்ச் சிங்கப்பூர் கிளை உட்பட வெளிநாட்டு வைப்புத்தொகையாளர்களுக்கு உள்நாட்டு வைப்புத்தொகையாளர்களைவிடக் குறைந்த முன்னுரிமை, வைப்புத்தொகையைத் திருப்பித் தருவதில், வழங்கப்பட வேண்டியதில்லை.

## வங்கியின் இயக்குநர்கள்

| பெயர் | பதவி |
|---|---|
| Chen Siqing | Chairman, Executive Director |
| Liao Lin | Vice Chairman, Executive Director, President |
| Lu Yongzhen | Non-executive Director |
| Zheng Fuqing | Non-executive Director |
| Feng Weidong | Non-executive Director |
| Cao Liqun | Non-executive Director |
| Anthony Francis Neoh | Independent Non-executive Director |
| Yang Siu Shun | Independent Non-executive Director |
| Shen Si | Independent Non-executive Director |
| Nout Wellink | Independent Non-executive Director |
| Fred Zuliu Hu | Independent Non-executive Director |

## சுயேச்சையான தணிக்கையாளரின் அறிக்கை

**Industrial and Commercial Bank of China Limited-ன் முதலீட்டாளர்களுக்கு**
(சீன மக்கள் குடியரசில் வரையறுக்கப்பட்ட பொறுப்புகளுடன் நிறுவப்பட்டது)

### கருத்து

நாங்கள் Industrial and Commercial Bank of China Limited (வங்கி) மற்றும் அதன் துணை நிறுவனங்களின் (குழுமம்) ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளைத் தணிக்கை செய்தோம். அதில் முடிவுற்ற 31 டிசம்பர் 2020-ம் ஆண்டுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலவர அறிக்கை, ஒருங்கிணைக்கப்பட்ட லாப நட்ட அறிக்கை, ஒருங்கிணைக்கப்பட்ட லாப நட்ட மற்றும் விரிவான இதர வருமான அறிக்கை, ஒருங்கிணைக்கப்பட்ட பங்குமுதல் மாற்ற அறிக்கை மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட ரொக்கப் புழக்க அறிக்கை மற்றும் முக்கிய கணக்கியல் கொள்கைகளின் சுருக்க மற்றும் இதர விளக்கத் தகவல்களும் உள்ளடக்கம்.

எங்களின் கருத்துப்படி ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் 31 டிசம்பர் 2020 அன்று நிலவிய குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலவரத்தையும் அன்றே முடிவுற்ற ஆண்டுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட நிதி செயல்பாடுகள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட ரொக்கப் புழக்க அறிக்கை பற்றியும் உண்மையாகவும் சரியாகவும் வெளியிடுகிறது. மேலும், அனைத்துலக கணக்கியல் தர வாரியத்தால் ("IASB") வெளியிடப்பட்டுள்ள அனைத்துலக நிதிநிலை அறிக்கை தரங்களுக்கு ("IFRSs") ஏற்பவும் ஹாங்காங் நிறுவன ஆணையின் கீழ்த் தேவையான தகவல்களை மறைக்காமல் வெளியிட்டுத் தயார்செய்யப்பட்டுள்ளன.

### கருத்தின் அடிப்படை

அனைத்துலக தணிக்கை தரங்களின் ("ISAs") அடிப்படையில் நாங்கள் தணிக்கை செய்தோம். இந்தத் தரங்களின் கீழ் எங்களுடைய பொறுப்புகள் பற்றி ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் கணக்காய்வாளர்களின் பொறுப்புகள் எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. நாங்கள் அனைத்துலக நெறிமுறை கழகத்தின் நிபுணத்துவக் கணக்காய்வாளர்களுக்கான நெறிமுறைகளுக்கு ("the Code") ஏற்பவும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் தணிக்கையில் சீன மக்கள் குடியரசில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகளுக்கு ஏற்பவும் குழுமத்தை விட்டு நாங்கள் சுயேச்சையானவர்கள். நாங்கள் இந்த விதிமுறைகளுக்கும் நெறிமுறைகளுக்கும் ஏற்ப எங்களின் பொறுப்புகளை நிறைவேற்றியுள்ளோம். நாங்கள் பெற்ற தணிக்கை ஆதாரங்கள் போதுமானது என்றும் எங்களின் கருத்துக்கு அடிப்படையாக இருக்கப் பொருத்தமானது என்றும் நம்புகிறோம்.

### முக்கிய தணிக்கை விவகாரங்கள்

முக்கிய தணிக்கை விவகாரங்கள் என்பது எங்களின் நிபுணத்துவ மதிப்பீட்டின் படி நடப்புக் காலகட்டத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கைக்கு மிகவும் முக்கியமானதாக கருதப்பட்ட விவகாரங்கள் ஆகும். இவ்விவகாரங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் ஒட்டுமொத்த தணிக்கையின் அடிப்படையில் ஆராயப்பட்டு, எங்களின் கருத்தை அதற்கேற்ப வகுக்கையில், இவ்விவகாரங்கள் குறித்த தனிப்பட்ட கருத்தை நாங்கள் வெளியிடவில்லை.

### இதர தகவல்கள்

இதர தகவல்களுக்கு இயக்குநர்கள் பொறுப்பு. ஆண்டறிக்கையில் உள்ள ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மற்றும் அது சார்ந்த எங்களது கணக்காய்வாளரின் அறிக்கையைத் தவிர்த்து அனைத்துத் தகவல்களும் இதர தகவல்கள் ஆகும்.

ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் மீதான எங்களின் கருத்து இதர தகவல்களை உள்ளடக்கியதல்ல. அது சார்ந்த எவ்வித உத்தரவாத முடிவையும் நாங்கள் வெளிப்படுத்தவில்லை.

ஆண்டறிக்கையில் உள்ள ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கைக்காக இதர தகவல்களைப் படித்து, அவை ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளுடன் அல்லது தணிக்கையின் போது எங்களுக்குக் கிடைத்த தகவல்களுடன் முரண்பட்டுள்ளதா அல்லது முக்கிய தகவல்கள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதா எனக் கருத்தில்கொள்வதே எங்களின் பொறுப்பாகும்.

நாங்கள் செய்த பணியின் அடிப்படையில் முக்கிய இதர தகவல்கள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என நாங்கள் முடிவெடுத்தால் அதைத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தெரிவிக்க எதுவுமில்லை.

### ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளுக்கான இயக்குநர்களின் பொறுப்புகள்

ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் IASB வெளியிட்டுள்ள IFRSs-களுக்கு ஏற்பவும், ஹாங்காங் நிறுவனங்களின் ஆணையின் கீழ் வெளியிடப்பட வேண்டிய தகவல்களின் அடிப்படையிலும் உண்மையான மற்றும் நேர்மையான நிலையை வெளிப்படுத்தும் வகையில் இயக்குநர்களால் தயார் செய்யப்பட வேண்டும். இயக்குநர்கள் தேவையென கருதும் உள்-கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பதின் வழி மோசடி மற்றும் பிழைகள் பற்றிய முக்கிய விவரங்களைத் தவறாக குறிப்பிட்டுவிடாமல் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் தயார்செய்யப்பட வேண்டும்.

ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளைத் தயார்செய்யும்போது குழுமத்தின் நிலைதன்மையை ஆராய்ந்து அது தொடர்ந்து வர்த்தகத்தில் இருக்க முடியுமா என்பதை நிர்ணயிக்க வேண்டியது இயக்குநர்களின் பொறுப்பு. அது பற்றிய தகவல்களை பொருத்தமான முறையில் வெளியிடுவதும் குழுமத்தைக் கலைத்துவிட அல்லது அதன் செயல்பாட்டை நிறுத்திவிட அல்லது வேறு எந்த ஒரு மாற்று ஏற்பாடும் இல்லையென கருதினால் ஒழிய, இயக்குநர்கள் நிறுவனத் தொடர்ச்சி கணக்கியல் அடிப்படையைப் பயன்படுத்த வேண்டும்.

குழுமத்தின் நிதிநிலை அறிக்கைகளைத் தயார்செய்யும்போது அவற்றை மேற்பார்வையிடுவதின் வழி இயக்குநர்கள் தங்களின் பொறுப்புகளை நிறைவேற்ற தணிக்கைக் குழு உதவி செய்யும்.

### ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கைக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

ஒட்டுமொத்த ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் மோசடி மற்றும் பிழைச் சார்ந்த தகவல்கள் எதுவும் தவறாகக் குறிப்பிடப்படவில்லை என்பதை நியாயமான வகையில் உறுதிசெய்து கணக்காய்வாளரின் அறிக்கையை எங்களின் கருத்துடன் வெளியிடுவதே எங்களின் நோக்கமாகும். இந்த அறிக்கை உங்களுக்காக மட்டும் ஒரு நிறுவனம் என்ற அடிப்படையில் வெளியிடப்படுகிறது. வேறு எந்த நோக்கத்திற்காகவும் அல்ல. இந்த அறிக்கையில் உள்ள தகவல்களுக்காக எந்த ஒரு நபருக்கும் எந்த வகையிலும் நாங்கள் பொறுப்பல்ல மற்றும் எந்தப் பொறுப்பையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

நியாயமான உத்திரவாதம் என்பது மிக உயர்ந்த உத்தரவாதமாகும். ஆனால் ISAs-களின் அடிப்படையில் செய்யப்படும் தணிக்கையால் ஏதேனும் முக்கிய தவறான-தகவல்கள் இருப்பின் அது கண்டுபிடிக்கப்பட்டுவிடும் என்பதற்கான உத்தரவாதமல்ல. தவறான-தகவல் மோசடி அல்லது பிழையால் ஏற்படலாம். இது தனித்து அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை முழுவதின் அடிப்படையில் எடுக்கப்படும் வர்த்தக முடிவுகளை மாற்றக்கூடியதாக இருந்தால், அது முக்கிய தவறான-தகவல் எனக் கருதப்படும்.

ISAs தர அடிப்படையில் செய்யப்படும் தணிக்கையின்போது நாங்கள் நிபுணத்துவ மதிப்பீடுகள் செய்வதுடன் நிபுணத்துவ ஐயப்பாட்டுடன் தணிக்கை முழுவதிலும் செயல்படுகிறோம். மேலும், நாங்கள்:

- ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் மோசடி மற்றும் பிழையினால் ஏற்படும் குறிப்பிடத்தக்கத் தவறான தகவல்களை அடையாளம் கண்டு அதற்கான சாத்திய இடரையும் மதிப்பிடுகிறோம். எங்களின் கருத்துக்கு அடிப்படையான தணிக்கை ஆதாரங்களைப் போதுமான மற்றும் பொருத்தமான வகையில் கண்டறியக்கூடிய தணிக்கை நடவடிக்கைகள் வடிவமைக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன. மோசடி சார்ந்த குறிப்பிடத்தக்கத் தவறான-தகவல்களைக் கண்டறிவது, பிழையினால் ஏற்படக்கூடியதை விடக் கடினமானதாகும். மோசடி என்பது கூட்டணியமைத்து வேண்டுமென்றே தகவல்களை வெளியிடாமல் இருப்பதும் தவறாக குறிப்பிடுவதும் அல்லது உள்-கட்டுப்பாட்டை மீறி செயல்படுவதுமாகும்.
- தணிக்கை நடவடிக்கைகளைச் சூழ்நிலைக்கேற்ப வடிவமைப்பதற்காக உள்-கட்டுப்பாட்டை சரிவர புரிந்துகொள்கிறோம். ஆனால், குழுமத்தின் உள்-கட்டுப்பாட்டின் செயல்திறனைப் பற்றிய கருத்தைத் தெரிவிப்பதற்கல்ல.
- பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் பொருத்தத்தையும் செய்யப்பட்ட கணக்கியல் மதிப்பீட்டையும் இவை சார்ந்த தகவல்களை இயக்குநர்கள் வெளியிட்ட விதத்தையும் மதிப்பிடுகிறோம்
- கிடைத்த தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையில் குழுமம் வர்த்தகத்தைத் தொடர்ந்து நடத்தமுடியாத நிச்சயமற்ற நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் உள்ளனவா என்பதை அறிந்து இயக்குநர்கள் நிறுவனத் தொடர்ச்சி கணக்கியல் அடிப்படையைச் சரியாகப் பயன்படுத்தியிருப்பதை முடிவுசெய்கிறோம். முக்கியமான நிச்சயமற்ற சூழல் இருப்பதை நாங்கள் உறுதிசெய்தால் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் கணக்காய்வாளர் அறிக்கையில் அது பற்றிய தகவல்களை வெளியிட வேண்டும். அப்படிப்பட்ட தகவல்கள் வெளியீடு போதுமானதாக இல்லையென்றால் எங்களின் கருத்தைத் திருத்த வேண்டும். எங்களின் முடிவுகள் கணக்காய்வாளர் அறிக்கை வெளியிடப்படும் தேதி வரை கிடைத்த தணிக்கை ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டது. இருந்தாலும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் குழுமம் தொடர்ந்து வர்த்தகத்தில் இருப்பதைத் தடுக்கலாம்.
- ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் பரிவர்த்தனைகளும் நிகழ்வுகளும் நேர்மையான வகையில் வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை பொருத்து ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் தகவல்கள் வெளியிடப்பட்ட விதம், அதன் அமைப்பு மற்றும் உள்ளடக்கம் பற்றி மதிப்பிடுகிறோம்.
- ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் மீதான கருத்தை வெளியிடக் குழுமத்திலுள்ள நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் பற்றிய போதுமான தணிக்கை ஆதாரங்களைச் சேகரிக்கிறோம். குழுமத்தின் தணிக்கை சார்ந்த மேற்பார்வை மற்றும் செயல்பாட்டுக்கு நாங்கள் பொறுப்பு. எங்களின் தணிக்கைக் கருத்துக்கு நாங்கள் முற்றிலும் பொறுப்பேற்கிறோம்.

திட்டமிடப்பட்ட தணிக்கையின் நோக்கம் மற்றும் கால நேரத்தையும் தணிக்கையின்போது உள்-கட்டுப்பாட்டில் உள்ள முக்கியமான குறைகள் உட்படக் கண்டறியப்பட்ட விசயங்களையும் தணிக்கைக் குழுவிற்கு நாங்கள் தெரிவிக்கிறோம்.

நாங்கள் தயார்செய்த அறிக்கை ஒன்றையும் தணிக்கைக் குழுவிற்குத் தருகிறோம். அதில் சுயேச்சைச் சார்ந்த நன்னெறி தேவைகள், அனைத்துத் தொடர்புகள் மற்றும் விசயங்களையும், தேவைப்பட்டால் அவற்றைப் பற்றிய அச்சுறுத்தல்களை களைய எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் பாதுகாப்புத் தகவல்களையும் தெரிவிக்கிறோம்.

தணிக்கைக் குழுவுக்குத் தெரிவித்த விசயங்களிலிருந்து, நடப்புக் காலகட்டத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கையில் முக்கியமான விசயங்கள் எவை என நாங்கள் நிர்ணயிக்கிறோம். எனவே, அம்முக்கிய விசயங்கள் கணக்காய்வாளரின் அறிக்கையில் வெளியிடப்படும். சட்டம் அல்லது விதிமுறைகள் பொதுமக்களுக்கு அதை வெளியிடத் தடை செய்தால் அல்லது அந்த விசயம் அறிக்கையில் வெளியிடப்பட்டால், அரிய சந்தர்ப்பத்தில் அதனால் ஏற்படும் குறிப்பிடத்தக்க எதிர்மறையான பாதிப்பு, பொதுநலனை விட அதிகமாக இருக்குமென்றால் வெளியிடப்படமாட்டாது.

இந்தச் சுயேச்சையான கணக்காய்வாளரின் அறிக்கை வெளியிடக் காரணமான தணிக்கையைச் செய்தவர் Wong Yuen Shan ஆகும்.

KPMG
Certified Public Accountants
Central Hong Kong
26 மார்ச் 2021